பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

27 ] சென்னை—ஞாயிறு, அக்டோபர் 13, *1946*. [ விலை. அணா. 2

## கட்டுக்கடங்காத அக்கிரமம்

ஜபல்பூரிலிருந்து ஒரு நிருபர் எழுதுகிறார் :—

“ஜபல்பூரிலுள்ள கிறிஸ்தவர் பெண் பாடசாலையின் உதவி நிதிக்காக ஹிந்து நண்பர் ஒருவர் ஒரு நாடகம் நடத்த ஏற்பாடு செய்தார். பாடசாலைப் பெண்களே நடித்தார்கள். கடைசி காட்சியில் அநாதையான பெண் ஒருத்தி தனக்கு ஏற்பட்ட துன்பங்களைத் தாங்கமாட்டாமல் அலுத்துப் போய் கடவுளிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். தேவ தூதர்கள் தோன்றி கிறிஸ்துவினிடம் நம்பிக்கை வைக்கும்படி அவளுக்குப் புத்திமதி கூறினார்கள். நாடகம் ஏசு கிறிஸ்துவைப் போற்றும் ஒரு தேவாரத்தோடு முடிவுற்றது. உடனே சில ஹிந்துக்கள் குழப்பம் உண்டுபண்ண ஆரம்பித்தார்கள். கிறிஸ்தவ மதத்தைப் பற்றி தூஷிக்க ஆரம்பித்தார்கள். நாடகத்திற்கு ஏற்பாடு செய்தநண்பரை பேச வொட்டாமல் தடுத்தார்கள். டிக்கட்டுக்குக் கொடுத்த பணத்தை திரும்பத் தரும்படி கூச்சலிட்டார்கள். அன்று பாடப்பட்ட தேவாரம் கிறிஸ்துவை போற்றுவதாக இராமல் கிருஷ்ணனைப் போற்றுவதாக இருந்தால் இவர்கள் இப்படி அக்கிரமம் செய்திருப்பார்களா?”

இந்த நிருபர் கூறுவது உண்மையாயிருந்தால் ஹிந்துக்கள் நடந்துகொண்டது முற்றிலும் தவறாகும். அவர்கள் கொஞ்சங் கூட சகிப்புத்தன்மை இல்லாதவர்களாய் நடந்திருக்கிறார்கள். தங்கள் அபிப்பிராயத்துக்கு ஒவ்வாத காரியங்கள் நடந்தால் அந்த இடத்துக்கு அவர்கள் போக வேண்டியதுமில்லை. அவற்றை ஆதரிக்க வேண்டியதுமில்லை. ஆனால் நடக்கும் காரியங்கள் தங்களுக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லி மனிதத்தன்மையில்லாமல் நடப்பது கொஞ்சமும் சரியன்று.

புது டில்லி, — 5-10-46 — மோ. க. காந்தி.

## சேவை தானே தெய்வ வணக்கம்

கேள்வி :—கடவுளை வணங்குவதற்காக செலவு செய்யும் நேரத்தை ஏழைகளுக்கு சேவை செய்வதற்காக செலவு செய்தால் நலமா யிருக்குமல்லவா ? உண்மையான சேவை செய்பவருக்கு பக்தி சிரத்தையோடு கடவுளை வணங்குவது அவசியமில்லை யல்லவா ?

பதில் :—இந்தக் கேள்வியில் தெய்வ உண்மையில் சந்தேகமும் மனச் சோம்பலும் காணப்படுகின்றன. கர்ம யோகிகளில் தலை சிறந்தவர்கள்கூட தேவாரம் ஓதுவதையோ தெய்வத்தை வழிபடுவதையோ ஒரு நாளும் விட்டுவிடுவதில்லை. பிறர்க்கு உண்மையான சேவை செய்வதே கடவுள் வழிபாடு என்றும், அப்படிச் சேவை செய்கிறவர்கள் தேவாரம் ஓதுதல் போன்ற தெய்வ வழிபாடுகளில் ஈடுபடவேண்டிய அவசியமில்லை என்றும், லக்ஷிய ரீதியாகக் கூறலாம். ஆனால் அனுபவத்தில் பஜனை முதலியவைகள் உண்மையான சேவைக்கு உதவியாய் இருக்கின்றன. பக்தர்களுடைய ஹிருதயத்தில் கடவுள் ஞாபகத்தை வைத்திருப்பதற்கும் உதவி செய்கின்றன.

புது டில்லி — 5-10-46 — மோ. க. காந்தி

## தீண்டாமையை ஒழிப்ப தெப்படி?

சென்னையிலிருந்து ஒரு ஹரிஜன் எழுதுகிறார் :—

ஹரிஜனங்களுக்கு ஆலயங்களைத் திறந்து விடுவதும், பொதுக் கிணறுகளில் ஜலமெடுப்பதற்கு அனுமதியளிப்பதும், கல்வி கற்பதற்கு பண உதவி செய்வதும் நல்ல காரியங்கள் தான். ஹரிஜனங்கள் தனியாகச் சேரிகளில் வசிப்பதை ஒழிப்பதுதான் தீண்டாமை என்னும் சாபத் தீட்டைக் கொஞ்சங்கூட இல்லாமல் ஒழிப்பதற்குள்ள சரியானவழி அல்லவா ?

பதில் :—ஹரிஜனங்களுக்குத் தாங்கள் விரும்பும் இடத்தில் வசிக்க அனுமதியளித்து விட்டால் தீண்டாமை அடியோடு போய்விடும் என்று கூறுவதைக் கேட்க நன்றாய்த்தான் இருக்கிறது. நான் அறிந்த மட்டில் ஹரிஜனங்கள் தனியாகத்தான் வாழவேண்டும் என்று கூறும் சட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களைத் தனியாக வசிக்கும்படி நிர்ப்பந்திக்கும் வழக்கம் தீயதாகும். அந்த வழக்கம் மறைந்துபோய்க் கொண்டிருக்கிறது. அது மிக மெதுவாகவே மறைந்து கொண்டிருப்பதால் அதைச் சீக்கிரமாகவே ஒழித்துவிடுவது ஒவ்வொருவருடைய கடமையாகும். ஜனங்களுடைய ஹிருதயத்தை இளக்குவது தான் அதற்கு வழி. பரிபூர்ணமாக தியாகம் செய்தால் விரும்பும் பலன் கைகூடாமல் போகாது.

“தியாகத்தின் மூலமாகவே பிரம்மா உலகத்தைச் சிருஷ்டித்தார். தியாகத்தின் மூலமாகவே விஷ்ணு உலகத்தைக் காப்பாற்றுகிறார்.

தியாகத்தின் மூலமாகவே சிருஷ்டி முழுவதும் அழியாமல் இருந்துகொண் டிருக்கிறது.

ஆதலால் பகவானை தியானம் செய்வாயாக !”

என்று துளசிதாசர் பாடியிருக்கிறாரல்லவா ?

அத்தகைய தியாகம் செய்ய தயாராயிருந்தால் தீண்டாமை நிச்சயமாக ஒழிந்துபோகும். ஹிந்துமதமும் சுத்தமாகி காப்பாற்றப்படும்.

புது டில்லி, — 5-10-46 — மோ. க. காந்தி

## ராமநாமம் ரக்ஷா பந்தனமா?

கேள்வி :—என்னுடைய மருமகன் நோயாயிருந்தான். அவனுடைய பந்துக்கள் மருந்துகொடாமல் ரக்ஷாபந்தனம் கட்டினார்கள். அது நன்மை செய்ததாகச் சொல்ல முடியாது. தங்கள் தாயாரும் கூட இந்தவிதமாக நடந்திருக்கக் கூடும். இப்பொழுது நீங்கள் ராமநாமத்தைப் பற்றிக் கூறுகிறீர்கள். அதுவும் ரக்ஷாபந்தனம் போன்றதுதானே அல்லவா ?

பதில் :—இந்தக் கேள்விக்கு இதற்குமுன் பதில் சொல்லி இருக்கிறேன். ஆயினும் மறுபடியும் பதில் சொல்வது நல்லதென்று எண்ணுகிறேன். என்னுடைய தாயார் எனக்கு மருந்து கொடுத்ததாகவே எனக்கு ஞாபக மிருக்கிறது. அவருக்கு மந்திர வாதத்திலும் ரக்ஷாபந்தனத்திலும் நம்பிக்கை கிடையாது. படித்த நண்பர்களுக்குக் கூட அவைகளில் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் எனக்கு இல்லை. அந்தவித மானகாரியங்களில் எனக்கு நம்பிக்கை இல்லாதிருப்பதால் ராமநாமத்திற்கும் மந்திரவாதத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்று நான் கொஞ்சமும் பயமில்லாமல் சொல்லமுடியும். ஹிருதய பூர்வமாக ராமநாமத்தை பஜிப்பவர்கள் இணையற்ற ஒரு சக்தியிடமிருந்து உதவி பெறுகிறார்கள். அணுகுண்டைக் கூட அதற்கு இணையாக சொல்ல முடியாது. அந்த சக்தி சகல துன்பங்களையும் நீக்கக்கூடிய வல்லமை பொருந்தியதாகும். ராமநாம பஜனையை ஹிருதய பூர்வமாகச் செய்ய வேண்டுமென்று கூறுவது எளிது. ஆனால் அப்படிச் செய்வது மிகவும் கஷ்டம். ஆயினும் மனிதன் அடையக்கூடிய மிகப் பெரிய சக்தி அதுதான்.

புது டில்லி, – 5-10-46 – மோ. க. காந்தி.

## கால் நடை அபிவிருத்தி

சர்தார் தத்தாசிங் எழுதியுள்ள ஒரு நீண்ட கட்டுரையின் சுருக்கம் வருமாறு :—

"இந்தியா தேசம் விவசாய தேசமாதலால் கால்நடைகளை அபிவிருத்தி செய்தால் விவசாயமும் அபிவிருத்தியாகும். உலகத்திலுள்ள கால் நடைகளில் 29 சதமானமான கால் நடைகள் இந்தியாவில் இருக்கின்றன. ஆயினும் பால் உற்பத்தி மிகக் குறைவாகவே இருக்கிறது. ஆள் ஒன்றுக்கு தினசரி நியூ ஜிலாந்தில் 56 அவுன்ஸும் ஆஸ்திரேலியாவில் 45 அவுன்ஸும் உற்பத்தியாகின்றன. ஆனால் இந்தியாவிலோ 7 அவுன்ஸ்தான். 20 முதல் 30 அவுன்ஸ் வரை ஒவ்வொருவரும் தினசரி குடிக்க வேண்டுமென்பது வைத்தியர்களுடைய கருத்து. அப்படியானால் நம்முடைய நாட்டில் உண்டாகும் பால் உற்பத்தியை மூன்று மடங்காகச் செய்யவேண்டும். இங்கே சராசரியாக ஆண்டொன்றுக்கு ஒரு பசு தருவது 750 ராத்தல் பால் தான். இதுவும் மற்ற தேசங்களை விட குறைந்ததுதான். இதற்கு மூல காரணம் தீனிக்குறைவுதான். ஆண்டொன்றுக்கு 27 கோடி டன் வைக்கோலும் 5 கோடி டன் புண்ணாக்கு முதலியனவும் தேவையாகும். ஆனால் 12½ கோடி டன் வைக்கோலும் 30 லக்ஷம் டன் புண்ணாக்கும் தான் கிடைக்கின்றன.

ஆதலால் கால் நடைகளுக்கு தீனி போடும் விஷயம் சம்பந்தமாக நான் கீழ்கண்ட யோஜனைகளைக் கூற விரும்புகிறேன் :—

I 1. விவசாயிகள் தீனிக்கு வேண்டிய பயிர்களை அதிகமாகப்பயிர் செய்யவேண்டும். அத்துடன் கினிகிராஸ் போன்ற புகற்களையும் பெர்ஸின் போன்ற மொச்சைகளையும் பயிர் செய்வது நல்லது.

2. தீனிப் பயிர்களை வீணாக்காமல் பாதுகாத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

3. மேய்ச்சல் நிலங்கள் ஏற்படுத்தவேண்டும். கால்வாய்க் கரையோரங்களையும் அதற்காக உபயோகப் படுத்திக் கொள்ளவேண்டும். காடுகளையும் இதற்காக உபயோகப்படுத்த வேண்டும். இப்பொழுது இந்தியாவிலுள்ள 970 லக்ஷம் கால் நடைகளில் 80 லக்ஷம் கால் நடைகள் தான் காடுகளில் மேய்கின்றன. காடுகளில் மாடுகளை மேய்த்தால் காடுகள் அழிந்து போகும் என்று கூறுவது தவறு.

II கால் நடை அபிவிருத்திக்காக கூறும் யோசனைகள் இவை :—

1. அந்தந்தப் பிரதேசத்திற்குத் தகுந்த பொலிகாளைகளை வைத்துக்கொள்ள வேண்டும், அந்தந்த கிராமம் அதற்கு வேண்டிய தீனிகளைக் கொடுக்க வேண்டும். அவைகளைக் கவனித்துக் கொள்கிறவர்கள், கால் நடை நோய் சம்பந்தமான அறிவு பெற்றவர்களாய் இருக்க வேண்டும்.

2. வேண்டாத காளைகளுக்கு காய் அடித்து விட வேண்டும்.

3. பொலி காளைகள் தொகையைப் பெருக்க வேண்டும். நம் நாட்டிற்கு பத்து லக்ஷம் காளைகள் தேவை. வருஷந்தோறும் 2½ லக்ஷம் கன்றுகள் உண்டாக வேண்டும். பசு மடங்கள் போன்றவைகளை இதற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

III கால் நடைகளுக்குத் தொத்து நோய் ஏற்படாமல் தடுக்க வேண்டும். தொத்து நோயால் வருஷந்தோறும் 3 கோடி கால் நடைகள் இறந்து வருகின்றன.

கிராம வாசிகளுக்கு இது விஷயமான கல்வி அளிக்க வேண்டும். வைத்திய வசதிகளையும் அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும்."

புது டில்லி. அமிர்த கௌரி.

## மண் குடிசைகள்

இந்திய மக்களில் பெரும்பாலோர் கிராம வாசிகள். அவர்கள் பெரும்பாலும் மண்ணையே வீடு கட்ட உபயோகிக்கிறார்கள். இப்போது நாட்டில் உணவு துணி விஷயமாக அதிகமான கவனம் செலுத்தப்படுகிறது. வீட்டைப் பற்றி அதிகமாக கவனிக்கக் காணோம். ஆனால் வீடு விஷயமும் தேகாரோக்கியத்துக்கு அவசியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

தேசம் ஏழையாயிருப்பதால் செங்கல் சுண்ணாம்புமுதலியவற்றைக் கொண்டு கட்ட முடியாது. மண்ணைக் கொண்டுதான் கட்டவேண்டும்.

ஆனால் இப்பொழுது கட்டியுள்ள மண் குடிசைகள் ஆரோக்கியத்துக்கு ஏற்றவையல்ல. புதிய முறையைக் கையாண்டால் மண்ணைக்கொண்டே நல்லவிதமான வீடுகளைக் கட்ட முடியும்.

அந்த முறையைக் கையாண்டு ஸ்பெயின் தேசத்து கிராமவாசிகள் கட்டிய வீடுகள் இப்பொழுதும் நல்ல ஸ்திதியில் காணப்படுகின்றன. பிரான்ஸ் தேசத்திலும் சைனாவிலும் அத்தகைய வீடுகள் இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன. இந்தியாவில் கூட அந்த முறையைக் கையாண்டுதான் பண்டைக் கால அரசர்கள் கோட்டைகளைக் கட்டி இருக்கிறார்கள்.

இப்பொழுது வழக்கத்திலிருந்து வரும் முறை இது :—

மண்ணில் தண்ணீரைச் சேர்த்துக் குழைத்து சுவர் எழுப்புகிறார்கள். தண்ணீர் அதிகமாயிருப்பதால் சுவர் காயும்பொழுது வெடிப்புகள் தோன்றுகின்றன. அதனால் சுவர் பலம் குறைந்து போகிறது.

சிலர் செங்கல் அறுத்து சுடாமல் பச்சையாக வைத்துக்கட்டி மேலே வெள்ளை அடிக்கிறார்கள். இந்தச் சுவரும் பலம் குறைந்ததுதான்.

ஆனால் புதிய முறை இது :—

செம்மண் முதல்தரமானது. மணல் அதிகமாய் சேர்ந்திருந்தால் களிமண்ணைக் சேர்த்துக்கொள்ள வேண்டும். எந்த மண் ஆனாலும் தூசி துரும்பு இல்லாமல் சுத்தம் செய்துகொள்ள வேண்டும்.

பிறகு கட்டியாக உருட்டத்தக்க அளவே தண்ணீர் சேர்த்துப் பிசைய வேண்டும். இந்த மண்ணைக் கொண்டு சுவர் கட்டுவதற்கு சில கருவிகள் தேவையாகும். அவைகளைக் கிராமத்துத் தச்சர் செய்ய முடியும்.

தண்ணீர் ஏறுதபடி அஸ்திவாரத்திற்கு கல்லையாவது செங்கல்லையாவது உபயோகிக்க வேண்டும். பிறகு பத்தடி நீளம் மூன்றடி அகலமுள்ள இரண்டு பலகைகளை நீளமாக வைத்து இடையில் பிசைந்த மண்ணைப் போட்டு நன்ருக அடித்து இறுக்கமாகச் செய்ய வேண்டும். இந்தவிதமாக சுவரை எழுப்பிக் கொண்டு போக வேண்டும்.

இந்த சுவரின் மீது சுண்ணும்பு பூசினல் மழை ஜலம் அதைக் கெடுக்காமலிருக்கும். அதிக மழை பெய்யும் இடங்களில் சுவரின்மீது முதலில் தார் எண்ணையைப் பூசி அதன்மேல் சுண்ணும்பைப் பூசலாம்.

இதற்கு வேண்டிய கருவிகளைக் கிராமப் பஞ்சாயத்தார் வைத்துக்கொண்டு வீடு கட்டுகிறவர்களுக்கு உதவலாம். இந்த மாதிரி சுவர் கட்டினல் பணச் செலவு கிடையாது. ஆரோக்கிய வசதிக்கேற்றபடி கட்டிக்கொள்ளலாம். சுண்ணும்பு பூசி விட்டால் யாரும் அதை மண் வீடென்று எண்ணமாட்டார்கள்.

மாகாண சர்க்கார்கள் வேண்டிய கருவிகளை ஒவ்வொரு கிராமத்துக்கும் வாங்கிக் கொடுக்கலாம். அதற்கு முன்னூறு ரூபாய்தான் செலவாகும். இப்படிச் செய்தால் தேசத்திலுள்ள ஜனங்கள் எல்லோருக்கும் சீக்கிரத்தில் வீடுகள் கட்டி முடித்து விடலாம்.

மாரிஸ் பிரைட்மென்

## ஏன் வெளி நாடு செல்லவேண்டும்?

ஒரு இந்திய டாக்டர் நரம்பு சம்பந்தமான சத்திர சிகிச்சை முறையைச் கற்றுக் கொண்டு இந்திய மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு அமெரிக்க தேசம் சென்ருர். அங்கே கொலம்பியா சர்வ கலா சாலையில் மிகுந்த சிரமப்பட்டுச் சேர்ந்து ஸர்ஜனக வேலை செய்து வருகிருர்.

கீழ்க் கண்ட காரணங்களுக்காக இந்திய மாணவர்கள் வெளி நாடுகளுக்குச் செல்லாம லிருக்கும்படி என்னுடைய செல்வாக்கை நான் உபயோகிக்க வேண்டு மென்று அவர் எழுதுகிருர் :—

"(1) இந்திய மாணவர்கள் பத்து பேர் அயல் நாட்டில் போய் பயிற்சி பெறுவதற்காக செலவாகும் பணத்தைக் கொண்டு இந்தியாவிலேயே நல்ல ஆராய்ச்சி சாலை ஏற்படுத்தவும் நாற்பது மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்கக் கூடிய முதல் தரமான ஆசிரியர் ஒருவரை நியமிக்கவும் செய்வது நல்லது.

(2) இங்கே வரும் மாணவர்கள் ஆராய்ச்சிக்கு வேண்டிய அடிப்படை கல்வியைப் பெற்றுக் கொள்கிருர்கள். ஆனல் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றதும் ஒரு ஆராய்ச்சிசாலையை எப்படி அமைப்பது என்பது அவர்களுக்குத் தெரியாது.

(3) அவர்களுக்குத் தொடர்ச்சியாக வேலை கிடைப்பது மில்லை.

(4) அயல் நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு நிபுணர்களைத் தருவித்துக் கொண்டால் நம்முடைய ஆராய்ச்சி சாலைகளை நல்லவிதமாக அமைத்துக் கொள்ளலாம்."

நம்முடைய மாணவர்களை அயல் நாடுகளுக்கு அனுப்பும் வழக்கத்தை நான் ஒருபொழுதும் ஆதரித்ததில்லை. அயல் நாட்டுக்குப் போய் வரும் மாணவர்கள் வட்டமான துளைகளுக்கு சதுரமான முளைகள் எப்படி பயன் படாதோ அப்படியே பயன் படாமல் போகிருர்கள் என்பது என்னுடைய அனுபவம். சொந்த நாட்டில் கிடைக்கும் அனுபவம்தான் அதிகமான பயன் தரக் கூடியது. ஆனல் அயல் நாட்டுக்குப் போகும் பைத்தியம் இன்று மாணவர்களைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கிறது.

மோ. க. காந்தி

## கல்யாணப் பல்லக்கு

கார்வால் ஜில்லாவைச் சேர்ந்த ஹிந்துக்கள் ரொம்பவும் வைதிக மனப்பான்மை வாய்ந்தவர்களா யிருக்கின்றனர். அறியாமையின் காரணமாக அவர்கள் ஹரிஜனங்களின் கலியாணப் பல்லக்கு ஊர்வலத்தை ஆலயங்களுக்கு முன்பும், பொது இடங்களிலும் ஹிந்துக்கள் வசிக்கும் வாசஸ்தலங்களிலும் அனுமதிப்பதில்லை. மாப்பிள்ளைகள் எந்தவிதமான வாகனத்தின்மீதும் ஏறிச் செல்ல அனுமதிப்பதில்லை. இன்றைக்கும் இம்மாதிரியான கொடுமைகள் நடப்பதைச் சகிக்க முடியாது. ஒரு நண்பர், "இம்மாதிரியான அறியாமையைப் போக்குவதற்குச் சரியான வழி ஹரிஜனங்களின் கலியாண ஊர்வலங்களைச் சட்டபூர்வமாக அனுமதிப்பதுதான்" என்கிருர்.

இந்தச் சட்டம் செய்தே தீரவேண்டும். எப்படியிருந்தபோதிலும் ஹரிஜனங்களின் கலியாண ஊர்வலம் எப்போது நடந்தபோதிலும் அப்போதெல்லாம் அந்த துரதிருஷ்ட ஹரிஜனங்களின் பாதுகாப்புக்காகப் போலீஸ் பந்தோபஸ்து அளிப்பது மிகவும் அவசியம். ஜில்லா அதிகாரிகள் இம்மாதிரியான ஊர்வலங்களில் யாரும் தலையிடக்கூடாது என்று உத்தரவு போடவேண்டும்.

மீறித் தலையிடுபவர்களையும், தலையீட்டுக்குக் காரணமாயிருப்பவர்களையும் தண்டிக்கவேண்டும்.

புது டில்லி, மோ. க. காந்தி.

## ஹரிஜனங்களுக்கு கிணறுகளை திறந்து விடல்

திரு. கல்யாண்ஜி மேத்தா சூரத் ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கு பல கிணறுகள் திறந்து விடப்பட்டிருப்பதாகக் கடிதம் எழுதியிருக்கிருர். இது நல்ல செய்திதான். ஆனல் ஆயிரக் கணக்கான கிணறுகள் இன்னும் திறந்து விடப்படாமலிருப்பது வெட்ககரமான விஷயமாகும். மாகாணங்களில் மதுவிலக்கும் மற்ற நிர்மாண வேலைகளும் நடக்க ஆரம்பித்திருப்பதைக் கேட்க சந்தோஷமாயிருக்கிறது.

புது டில்லி, — 8-10-46 — மோ. க. காந்தி

## ஹிந்துஸ்தான் சாரணர் சங்கம்

ஹிந்துஸ்தான் சாரணர் சங்கத்தார் செப்டம்பர் 29-ம் தேதி மாலை பிரார்த்தனை நடந்தபின் காந்தியடிகளைக் கண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். இப்போது சங்கத்தில் சுமார் 3-லட்சம் சாரணர்கள் இருப்பதாக கூறினர்கள்.

"அப்படியானல் ஏன் நாட்டில் கலகங்களும், கத்திக் குத்துக்களும் நடைபெறுகின்றன? சண்டையிடுகிறவர்களினிடையில் சாரணர்கள் ஒரு தசைச்சுவராக நின்று தங்கள் ரத்தத்தைச் சிந்தி ரத்தக்களரியைத் தடைசெய்யக்கூடாதா?" என்று காந்தியடிகள் கேட்டார்.

பியாரேலால்.

# தமிழ் ஹரிஜன்

அக்டோபர் 13 ஞாயிறு 1946


## வனஸ்பதியால் உண்டாகும் அபாயம்

"ஸர்தார் தத்தார் ஸிங் வனஸ்பதி உற்பத்தியைத் தடுக்க வேண்டும் என்று கூறிய யோசனையைத் தாங்கள் 14-4-46 ஹரிஜன் பத்திரிகையில் ஆதரித்து எழுதியிருந்தீர்கள். அந்தக் கட்டுரையில் கண்ட பல யோசனைகளின்படி நடந்தால் அந்தத் தீமையைத் தடுத்துவிட முடியும். ஆனால் துரதிருஷ்டவசமாக இன்னும் யாதொரு நடவடிக்கையும் ஆரம்பிக்கப் படக் காணோம். பஞ்சாபிலும் அகோலாவிலும் ஷீகானிலும் கர்னூலிலும் வனஸ்பதி உற்பத்தி செய்வதற்கான புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதை உடனே நிறுத்த வேண்டியது அவசியமாகும். பஞ்சாபில் சர்க்கார் வனஸ்பதிக்கு நிறமூட்டும்படிகூட உத்திரவு பிறப்பிக்காமல் இருக்கிறார்கள்."

இது ஒரு நண்பருடைய கடிதத்தின் சுருக்கமாகும். அவர் வனஸ்பதி என்று கூறுவது வனஸ்பதி நெய்யையே. சாதாரணமாக வனஸ்பதி என்பது புஷ்பங்களையும் கனிகளையும் காய்கறிகளையுமே குறிக்கும். அந்தப் பொருளில் வனஸ்பதிக்கு யாரும் ஆட்சேபம் கூறமாட்டார்கள். ஆனால் நண்பர் குறிப்பிடும் வனஸ்பதி ஒரு விஷமே யாகும். அதை நெய்யென்று விளம்பரம் செய்கிறார்கள். ஆனால் அது நெய்யே யன்று. ஒரு நாளும் நெய் ஆக முடியாது. அது என்றேனும் நெய்யாக ஆக முடியுமானால், இனி மேல் உண்மையான நெய் தேவையில்லை என்று நானே முதன் முதலாக உலக முழுவதும் பறைசாற்ற ஆரம்பித்து விடுவேன். நெய் என்பதும் வெண்ணெய் என்பதும் ஏதேனும் ஒரு மிருகத்தின் பாலிலிருந்து எடுக்கப்படும் ஒரு கொழுப்பு வஸ்துவாகும். தாவர எண்ணெய்யை நெய் போன்ற உருவத்தில் தயார் செய்து "நெய்" என்று கூறி விடுவது இந்திய மக்களை ஏமாற்றுவதாகும். அது முற்றிலும் அயோக்கியத்தனமே யாகும். இத்தகைய பொருள்களை நெய் என்று கூறி விற்காமலிருப்பது ஒவ்வொரு வியாபாரியின் கடமையாகும். எந்த சர்க்காரும் இத்தகைய விற்பனைக்குக் கொஞ்சம்கூட அனுமதி தரலாகாது. இந்தியாவிலுள்ள கோடானு கோடி ஏழை மக்களுக்கு பாலோ நெய்யோ மோரோ எதுவும் கிடைப்பதில்லை. நாட்டில் மரண விகிதம் நாளுக்கு நாள் அதிகமாக ஏறிக்கொண்டு போவதிலும் ஜனங்களின் பலம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு போவதிலும் ஆச்சரிய மொன்றுமில்லை. மனிதன் தான்யமோ பாலோ பாலிலிருந்து செய்த பொருள்களோ இல்லாமல் வாழ முடியாது. ஆதலால் இது விஷயத்தில் ஜனங்களை ஏமாற்றுகிறவர்களும் ஏமாற்ற இடங் கொடுப்பவர்களும் இந்திய நாட்டின் விரோதிகளே யாவார்கள்.

புது டில்லி — 6-10-46 — மோ. க. காந்தி.

## வாரக் கடிதம்

### சோதனைக் காலம்

பல மாதங்கள் இங்கிலாந்தில் தங்கி விட்டு இப்பொழுது இந்தியாவுக்குத் திரும்பி வந்துள்ள ஒரு நண்பர் இங்கிலாந்திலுள்ள ஜனங்கள் உணவு நெருக்கடியை எப்படி சமாளிக்கிறார்கள் என்பதைக்குறித்து காந்தி யடிகளிடம் கூறினார். அங்கே யாரும் குறை கூறுவதில்லை. எல்லோரும் நிலைமைக் கேற்றபடி கஷ்டத்தைச் சகித்துக் கொள்கிறார்கள். பணக்காரர்கள் துன்பங்களை ஏழைகளைப் போலவே சகித்துக் கொள்வதில் பெருமை யடைகிறார்கள். எல்லோருக்கும் இது சோதனைக் காலமாக இருக்கிறது. எல்லோரும் அதை வெற்றிகரமாக சமாளித்துக் கொள்ள முயன்று கொண்டிருக்கிறார்கள்.

காந்தி அடிகள் பிரார்த்தனைக் கூட்டங்களில் இவ் விஷயத்தை கூறி மேலும் கூறியதாவது :—

"நமக்கும் இது ஒரு சோதனைக் காலம்தான். ஐம்பது வருஷங்களாக போராட்டம் நடத்தியன் பலனாக இப்பொழுது சுதந்திர ஆலயத்தின் வாயிலில் வந்து விட்டதுபோல் தோன்றுகிறது. போராட்டம் நடக்கும் பொழுது, உத்ஸாகம் உண்டாகும். அந்த உத்ஸாகம் நமக்குத் தைரியத்தை அளித்துக் கொண்டிருக்கும். ஆனால் உண்மையான சோதனைக் காலம் யாதெனில் போராட்டம் நின்ற பின் பெரிய பிரச்னைகளைத் தீர்க்க வேண்டி ஏற்படும் பொழுதுதான். நாம் வெகு காலமாக கஷ்டப்பட்டுத் தேடியுள்ள சுயராஜ்யத்தை சரியாக நிர்வகிப்பதற்கு நமக்கு வேண்டியது யாது? பரிபூர்ணமான அடக்கமும் சுய நலமின்மையும்தான்.

### கைராட்டினம்

இப்பொழுது பாடப்பட்ட பாட்டில் தன்னை மறந்தவனே கடவுளைக் காண்பான் என்று கவிஞர் கூறுகின்றார். அதன் பொருளை அறிந்து கொண்டால் நமக்கு வேறே எதுவும் தேவையில்லை. கை ராட்டினம் கற்றுக் கொடுப்பதும் இதுதான். கை ராட்டினத்தின் மூலமாக எப்படிக் கடவுளைக் காண முடியுமென்று கேட்கலாம்.

கைராட்டினமானது நம்மைப் பாமர மக்களோடு ஐக்கியமாகும்படி செய்கின்றது. லக்ஷாதிபதிகள் பணத்தைக் கொண்டு எதையும் பெற்று விடலாமென்று எண்ணுகிறார்கள். ஆனால் அது உண்மை இல்லை. எந்த நிமிஷத்திலும் எமன் வந்து அவர்களைக் கொண்டு போய்விடக் கூடும். சிலர் தினந்தோறும் குத்திக் கொல்லப் படுகிறார்கள். ஆனால் அந்த விதமாக உயிரை இழப்பது சுயநலத்தை விடுவதாகாது. கடவுளைக் காண வேண்டுமானால் நாமாக வேண்டுமென்று தியாக புத்தியுடன் சுய நலத்தைத் துறந்துவிட கற்றுக் கொள்ளவேண்டும். கைராட்டினமானது யாரையும் விலக்குவதை சம்மதிக்காது. பரம ஏழைகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டு மென்றே சொல்லும். ஆதலால் நாம் பரிபூர்ணமாக கர்வத்தைத் துறந்து அடக்கத்தைக் கைக்கொள்வது அவசியமாகும். கைராட்டினம் தான் சுயராஜ்ய ஆலயத்தை திறக்கும் திறவு கோலாகும். சுயராஜ்யத்துக்காக நூல் நூற்கலாம். ஆனால் அப்படிச் செய்வதின் காரணமாக கர்வம் உண்டாகுமானால் ஆத்ம சுய ராஜ்யமும் கடவுள் சாந்நித்தியமும் கைகூட மாட்டா.

சுய நலத்தைத் துறந்து விட்டால் அது நம்முடைய நடத்தையில் தோன்றும். மிகச்சிறிய காரியம் செய்தாலும் கூட அதில் அதைக் காணலாம். நம்முடைய மன முழுவதும் மாறிவிடும். நாம் செய்யும் காரியமெல்லாம் பொது நலக் காரிய மாகவே இருக்கும்.

கடவுளைக்காண எங்கும் தேடி அலையவேண்டியதில்லை என்றும் கடவுள் நம்முடைய ஹிருதயத்திலேயே கோயில் கொண்டிருக்கிறார் என்றும் நாம் நம்முடைய ஹிருதயத்தில் சுயநலத்தை ஏற்றி வைத்து விட்டால் கடவுளை அவருடைய சிம்மாதனத்திலிருந்து இறக்கி விடுகிறோமென்றும் அந்த கவி கூறுகிறார்.

கடவுள் அரசர்க்கரசராய் சகல வல்லமை பொருந்திய வராய் இருந்தபோதிலும் யார் சுயநலத்தை அறவே நீக்கி விட்டு அவரையே நம்பி நிற்கிறாரோ அவருடைய எந்த ஏவலையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார். ஆதலால் நாம் சுயநலத்தை விட்டு விட்டு நம்முடைய ஹிருதயத்திலேயே கடவுளைக் காண வேண்டும்.

### கடவுளே! கருணை செய்யும்

இந்த பைத்திய வெறி என்று ஒழியும் ? கல்கத்தாவில் கொலைகளும் டக்கா, ஆக்ரா, ஆமதாபாத், பம்பாய் ஆகிய நகரங்களில் கத்திக் குத்துகளும் நடைபெறுகின்றன. இப்பொழுது இது போதாதென்று விஷமிடுவது நடைபெற ஆரம்பித்திருக்கிறது. இந்த அக்கிரம சிகரத்துக்கும் இந்தியா போக வேண்டுமா? அதிகமான லஞ்சம் நடக்குமிடத்தில் அதிகமான குற்றம் நடக்கும் என்னும் இந்தியப் பழமொழியின் உண்மையை உலகத்துக்கு நிரூபித்துக் காட்டவே இவ்வாறு நடக்கின்றதா ?

இன்று அக்டோபர் 2-ம் தேதி என்னுடைய பிறந்த நாள். இப்பொழுது கவி ரவீந்திரருடையப் பேத்தி ஸ்ரீமதி நந்திதா கிருபாளனி ரவீந்திரருடைய பாடலை இனிமையான குரலில் பாடினார் :—

"இருதயம் காய்ந்து போய் வெடிக்கும் பொழுது கடவுளே ! கருணை மழையை பொழிந்தருளும்.

வாழ்வு சுவையை இழக்கும்பொழுது கவிதையைக் கொண்டு தாரும்.

தடபுடலாக வேலை செய்யும் பொழுது எங்கு பார்த்தாலும் இரைச்சலாக இருக்குமே, என்னை நான் மறந்திருப்பேனே, அப்பொழுது என் மௌன குருவே! என்னுடைய ஹிருதயத்தில் சாந்தியையும் சமாதானத்தையும் நிறைத்தருளும்.

என்னுடைய வறுமையுற்ற ஹிருதயம் காலை முடக்கிக் கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கும் பொழுது என் அரசே! கதவைத் திறந்து கொண்டு அரச விருதுகளோடு உள்ளே வந்தருளும்.

ஆசையானது மயக்கத்தைக் கொடுத்து மனத்தைக் குருடாக்கும் பொழுது புண்ணிய புருஷரே ! ஒளியுடனும் இடியுடனும் எழுந்தருளும்."

இன்று ரவீந்திரருடைய இந்தத் தேவாரத்தின் மூலமாக நம் எல்லோருக்கும் ஒரு விசேஷச் செய்தியை கடவுள் அனுப்பி இருப்பது போல் தோன்றுகிறது. இன்று இந்தியாவின் உயிர்ச் சுனைகள் நீர்வற்றி உலர்ந்து போனது போல் காணப்படுகிறது. காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டு விட்டதால் எல்லாம் கிடைத்து விட்டதாக எண்ணினால் அது முட்டாள் தனமாகும். நம்முடைய மனமானது மயக்கத்தால் மருண்டிருக்கும் சமயத்தில் நம்மைத் தட்டி எழுப்புவதற்காக கடவுள் தம்முடைய ஒளியையும் இடியையும் கூடக் கொண்டுவந்திருப்பது போல் தோன்றுகிறது.

### கோவா

நம்முடைய உயிர்ச் சுனை எவ்வளவுதூரம் உலர்ந்து போய்விட்டது என்பதை இந்தியாவில் இணைபிரிக்க முடியாத பாகமாயுள்ள கோவா என்னும் சிறிய தீவில் நடக்கும் காரியங்களைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். அங்கே டாக்டர் ராம் மனோகர் லோகியா கைதி செய்யப்பட்டு தனிச் சிறையில் இடப்பட்டிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. சிறிது காலத்திற்கு முன்புதான் பிரஜா உரிமை வேண்டுமென்று கேட்ட குற்றத்திற்காக திரு காகோட்காருக்கு ஒன்பது வருஷ தீவாந்தர சிக்ஷை கிடைத்தது. டாக்டர் லோகியா பெரிய படிப்பாளி. எனக்கும் அவருக்கும் அபிப்பிராய வித்தியாச முண்டு. அதைக் கொண்டு நான் அவருடைய விஷயத்தைக் கவனிக்க கூடாதென்று சொல்ல முடியாது. அவர் கைதியானதும் அங்கே நடப்பதும் எனக்கு எவ்வளவு வருத்தத்தைத் தருகின்றனவோ அவ்வளவு உங்களுக்கும் வருத்தத்தைத் தரும். அவர் கோவா சர்க்காருக்குக் கடிதம் எழுதினார். ஆனால் எவ்வித பலனும் உண்டாகவில்லை. நம்முடைய முதல் மந்திரி ஜவஹர் தம்முடைய முறையில் இந்த அநீதியை நீக்க முயன்று கொண்டிருக்கிறார். இந்தியரை அந்நிய நாட்டார் என்று கூறி கோவாவுக்குள் வர வொட்டாது தடுப்பது இந்தியமக்களை அவமதிப்பதாகும். காஷ்மீர்போன்ற சமஸ்தானங்களைப் போலவே கோவாவும் இந்தியாவில் ஒரு பாகமே யாகும். டாக்டர் ராம் மனோகர் லோகியாபோன்ற ஒருவரை கோவா நகரத்திற்குள்ளோ அல்லது பிரிட்டிஷ் ஆட்சிக்கு நேரடியாக உட்படாத பிரதேசத்திற்குள்ளோ வரக்கூடாது என்று சொல்வது சகிக்க முடியாத காரியமாகும்.

### தசராவின் உட்பொருள்

இவ்விதமாக அவமானங்களும் ஆத்ம வறுமையும் ஏற்பட்டிருக்கும் பொழுது விருந்துகளும் ஊர்வலங்களும் நடத்தி தசராவைக் கொண்டாட நமக்கு உரிமை உண்டா? தினந்தோறும் கத்திக்குத்துகள் நடக்கின்றன. சகோதரர்கள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். இந்த நிலைமையில் சந்தோஷம் கொண்டாட இடமுண்டா?

ராமன் இராவணனை வெற்றிகொண்ட வைபவம் தான் தசரா என்பது. ஆனால் அந்த வெற்றி பலாத்காரத்தினால் அடையப்பட்டதன்று. சர்வாயுத பாணியாகவும் மிகுந்த பலமுடையவனாகவும் தேர் முதலிய போர்ச் சாதனங்கள் உடையவனாகவும் உள்ள ராவணனை எப்படி ஆயுதமில்லாமலும் கவசமில்லாமலும் நீர் ஜெயிக்கப் போகின்றீர் என்று விபீஷணன் ஸ்ரீராமச்சந்திரனைப் பார்த்துக் கேட்டான். நம்பிக்கையும் தூய்மையுந்தான் வெல்லப் போகின்றன என்று ராமன் பதிலுரைத்தார். அவருடைய மன அடக்கந்தான் அவருடைய வில்லாக இருந்தது. தீமையைத் தோற்கச் செய்து நன்மை வெற்றி அடைந்ததே அவருடைய வெற்றியாகும். நீங்கள் நம்முடைய மதத்தின் பொருளையும் தசராவின் பொருளையும் சரியாக அறிந்து கொண்டால் நீங்கள் தசராவை வீட்டில் வைத்து பிரார்த்தனை செய்து கொண்டாட வேண்டியதாகும்.

என்னுடைய அஹிம்ஸைக் கொள்கை ஹிந்துக்களுடைய ஆண்மையை அழித்து விட்டதாகவும், நான் மகாத்மா அல்ல என்பதாகவும் நான் ஜனங்களுக்குக் கேடு செய்வதாகவும் அவர்களுக்குத் தவறான வழி காட்டுவதாகவும் என்னை ஏசி அநேகர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நான் மகாத்மா என்று எந்த நாளும் சொல்லிக் கொள்ளவில்லை. நான் உங்களைப் போல சாதரண மனிதன்தான், நான் யாருக்கும் கேடு செய்ததில்லை. உங்களுடைய நன்மைக்காகவும் உலகத்தின்நன்மைக்காகவுமே என்னுடைய யோசனைகளை உங்களுக்குக் கூறுகிறேன். உங்களால் அஹிம்ஸையாக நடக்க முடியாவிட்டால் நீங்கள் கோழைகளாக இராமல் பலாத்காரத்தை உபயோகித்து உங்களைப் பாது காத்துக் கொள்ள வேண்டும். ஆனால் சகோதரன் கொல்ல வந்தால் அவனைக் கொல்ல எண்ணாமல் புன் சிரிப்புடன் உயிர் துறப்பதே தலை சிறந்த வீரமாகும். எப்பொழுது சண்டை பிடிக்கலாமென்று ஆசைப் படுவது சரியன்று. அது தற்காப்பாகாது.

அது உங்களுக்கும் கேடுதரும். தேசத்திற்கும் கேடு தரும். நீங்கள் உங்கள் தலைவர்களுக்கு முற்றிலும்

விரோதமாக நடந்தவர்களாவீர்கள். உங்கள் செயல் அவர்கள் செய்யும் சுயராஜ்ய முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுவதாயிருக்கும். இன்று விருந்துண்ணவோ ஒரு கவளம் சோறேனும் அவசியத்துக்கதிகமாக உண்ணவோ யாருக்கும் உரிமை கிடையாது என்பதை மறுபடியும் கூற விரும்புகின்றேன். நீங்கள் கட்டுப்பாடான முறையில் நடந்து கொண்டால் இந்தியா வாழும். இல்லையேல் சாகும். நீங்கள் தலை நிமிர முடியாது போவீர்கள்.''

### ஆப்கானிய நண்பர்

பண்டைக் காலத்தில் ஒரு மகான் மற்ற நாடுகளை ஆக்கிரமிப்பதற்காக இல்லாமல் சேவை செய்வதற்காகவும் நன்மை புரிவதற்காகவும் நாகரிகம் வழங்குவதற்காகவுமே சேனைகளை அனுப்ப வேண்டு மென்று சொன்னர். ஆப்கானிஸ்தானமும் இப்பொழுது பஞ்சத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே துணிப் பஞ்சம் அதிகம். ஆப்கானிஸ்தானத்துக்கு துணி அனுப்ப உதவ் செய்ய முடியுமா என்று ஆப்கானிய சர்க்கார் பண்டிட் ஜவஹர்லால் நேருவிடம் கேட்டிருக்கிருர்கள். ஜவஹர்லால் அந்த விஷயத்தை காந்தி யடிகளுக்குத் தெரிவித்தார். பஞ்சாபில் இரண்டரை லக்ஷம் ரூபாய் பெறுமான கதர் கொடுப்பதற்கு தயாரா யிருப்பதாக சில தினங்களுக்கு முன்புதான் அதிர்ஷட வசமாக ஒரு செய்தி காந்தியடிகளிடம் வந்து சேர்ந்தது. ஆப்கானிய ஸ்தானுதிபதி அக்டோபர் ஐந்தாம் தேதி காந்தி யடிகளைப் பார்த்தபொழுது காந்தி யடிகள் இந்த விஷயத்தைச் சொன்னர்.

'' ஆப்கானிய நண்பர்கள் அச்சுப் போட்ட கதரையும் சாயம் தோய்த்த கதரையும் பார்த்து விட்டு தாங்கள் அவற்றை மிகுந்த சந்தோஷத்துடன் வாங்கி கொள்வதாக கூறினர்கள். பண்டிட் ஜவஹர்லால் ஆப்கானிஸ்தானத்திலேயே கதர் உற்பத்தி செய்வதற்காக கதர் விஷயத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களை அனுப்பி வைப்பதாக யோசனை கூறினர். அதையும் ஆப்கானிய நண்பர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் கனுகாந்தி நடத்தி வரும் கை ராட்டின வகுப்பைப் போய் பார்த்தபோது சிறுவர்களும் சிறுமிகளும்கூட ஒரு வார காலத்துக்குள் நூற்கும் வித்தையை கற்றுக் கொள்ள முடியு மென்பதைக் கண்டு ஆச்சரியப் பட்டார்கள். ஆப்கானியஸ்தானத்தில் இரண்டு நெசவு மில்கள் இருக்கின்றன. அவற்றில் சுமார் அறுபது லக்ஷம் கஜம் துணி உற்பத்தியாகின்றது. அங்கும் ஒருவிதமான கதர் உற்பத்தி யாகிறது. ஆனல் அது நிரம்ப முறடாக இருக்கிறது. கைத்தறி நெசவும் இன்னும் உயிரோடிருந்து கொண்டிருக்கிறது. கை ராட்டினத்தில் நூற்பதுதான் அடியோடு நின்று விட்டது. அமெரிக்கன் நீண்ட இழைப் பருத்தி அவர்களுக்கு வேண்டிய அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அதில் ஒரு பாகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. எங்கும் ரோம நூல் உற்பத்தி நடந்து கொண்டிருக்கிகிறது. குளிர் காலத்தில் அங்கே ஜனங்கள் வேலை யில்லாமல் இருக்கிருர்கள், அந்தக் காலத்தைச் சரியான விதத்தில் பயன் படுத்தினல் தங்களுக்கு வேண்டிய துணியைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

பண்டிட் ஜவஹர்லால் நம்முடைய முதல் மந்திரியாய் இருக்கிருர். யாராவது கஷ்டப்பட்டால் அவர் அலக்ஷியமா யிருக்க முடியாது. இன்று நாம் பைத்தியம் பிடித்து ஒருவரோ டொருவர் சண்டை பிடித்துக் கொண்டிருக்கிறு மென்பதை வெட்கத்தோடு ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். இந்தியா அஹிம்சையை உபயோகித்து இவ்வளவு தூரம் சுதந்திரத்தை நெருங்கிவிட்டதைக் குறித்து இந்தியாவைப் பாராட்டுவதாக உலகத்தின் சகல பாகங்களிலிருந்தும் தந்திகள் வந்துகொண் டிருக்கின்றன. அப்படி இருக்க நாம் யாரையும் பகைத்துக் கொள்ளமுடியுமா? நம்முடைய கபர்க்கான் ஒரு பட்டானி ஆவார். அவரைப்போன்ற பட்டானியர்கள்தான் ஆப்கானியர்கள். அவர்கள் துணி வேண்டுமென்று கேட்கும்பொழுது அவர்களுக்கு உதவி செய்வது இந்தியாவின் கடமையாகும். இந்த அன்புநதி இந்தியாவிலிருந்து பாயமுடியும், பாயவும் வேண்டும். பண்டைக்காலத்தில் நம்முடைய தேசம் தனக்கு வேண்டிய துணி முழுவதையும் தயாரித்துக் கொண்டதோடு அயல் நாடுகளுக்கும் துணி அளித்துக்கொண்டு வந்தது. நம்முடைய மஸ்லின் துணிகள் அந்தக் காலத்தில் உலகமெங்கும் புகழ் பெற்றிருந்தன. இன்று நாம் நம்முடைய தேசத்தில் நம்முடைய சோம்பலின் காரணமாக உடுக்க உடையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேம். எளிதாக உணவையும் உடையையும் உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய இந்த தேசத்தில் இப்பொழுது தானியத்தையும் துணியையும் பணங்கொடுத்து விலைக்கு வாங்கமுடியாத நிலைமையில் இருக்கின்றேம. நாம்மட்டும் நூற்க கங்கணம் கட்டிக் கொண்டால் நாம் நமக்குமட்டு மின்றி உலக மக்கள் எல்லோருக்குமே துணியை உற்பத்தி செய்துவிட முடியும் என்று உறுதி கூறுகின்றேன்.''

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

பிறந்தநாள் வாழ்த்துக்களின் முக்கியத்துவம் பிறந்தநாள் கொண்டாடுபவரைப் பற்றி கூறுவது அன்று. எந்தச் சமயத்தில் கொண்டாடப்படுகிறதோ அந்தச் சமயத்தில் காணப்படும் லட்சியங்களையும் அபிலாஷைகளையும் கூறுவதே யாகும். பெரியோர்களை கௌரவிப்பதைக் கொண்டே அவர்கள் வாழும் காலத்தை மதிப்பிட முடியும். காந்தியடிகளுக்கு வந்துள்ள பிறந்தநாள் வாழ்த்துக்களிலிருந்து உலகமானது இப்பொழுது எதை நாடி நிற்கின்றது என்பதை அறிந்துகொள்ளலாம்.

அந்த வாழ்த்துக்களில் சில வருமாறு :—

''1. தாங்கள் இத்தனை வருஷகாலமாக இந்தியா சுதந்திரம் அடைவதற்காக பாடுபட்டிருக்கின்றீர்கள். உங்கள் தேசமக்கள் பரிபூரண சுதந்திரம் அடைந்து சுகவாழ்வு பெறுவதைக் காணும் பொருட்டு நீங்கள் நூற்றி இருபத்தைந்து வயதுவரையாவது வாழ வேண்டுமென்று விரும்புகின்றேன்.

இந்தக் காலம் மிகுந்த கஷ்டமான காலம். ஆயினும் நாம் சரியான வழியிலேயே முன்னேறிக்கொண்டு வருகிறேம்.

இன்னும் சில அடிகள் எடுத்துவைத்தால் போதும் லக்ஷியம் சித்தியாகிவிடும். இந்தியா பரிபூரண சுதந்திரம் அடைந்துவிடும். நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து சந்தோஷம் கொண்டாடுவோம்.''

2. ''காந்தியவர்களே! உலகத்தில் இப்பொழுது நன்மைக்கும் தீமைக்கும் போர் நடந்து கொண்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் உங்கள் பிறந்தநாள் கொண்டாட்டம் வந்திருக்கின்றது. நான் உங்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்தையும் அனுப்புகின்றேன். நீங்கள் தீர்க்கதரிசி; உங்களுடைய லக்ஷ்யம் அடுத்த வருஷத்தில் இன்னும் அதிகமாக நெருங்கி வருவதாக! நீங்கள் பேரன்பு கொண்டுள்ள உங்கள் தேசத்துக்கு அதிகமான அளவில் சுதந்திரம் சமாதானமும் உண்டாவதாக! எங்களுடைய வரகவி வில்லியம் ப்ளேக்

நான் உன் கையில் தங்கக்கயிறை கொடுக்கின்றேன்
அதை நீ ஒரு பந்தாக சுருட்டமட்டும் செய்
அது உன்னை ஜெருசலத்தின் சுவரில் கட்டப்பட்டுள்ள
தேவலோக வாசலுக்கு கூட்டிக்கொண்டு செல்லும்.

என்று பாடியிருக்கிறார். பூலோகத்தில் ஏற்படவேண்டிய தேவராஜ்யத்தையே கவிஞர் ப்ளேக் ஜெருசலமென்று குறிப்பிடுகின்றார். அவர் கூறும் தங்கக் கயிறு மன்னிக்கும் குணமேயாகும்.

இந்த விஷயத்தில் நீங்களும் அவரும் ஒரே வித உணர்ச்சியுடையவர்கள். நீங்களும் அந்தக் கயிற்றை எங்கள் கையில் கொடுத்திருக்கிறீர்கள். நாங்கள் அதை நாள்தோறும் பிரித்து தேவராஜ்யத்தை அடைய வேண்டியவர்களாயிருக்கின்றோம். உங்கள் பிறப்பும் வாழ்க்கையும் மனித ஜாதியின் பொக்கிஷங்களாயிருக்கின்றன. அவை எப்பொழுதும் இருளில் பிரகாசிக்கும் ஒளியாக இருந்து கொண்டிருக்கும். உங்கள் பிறந்த தினத்தை கொண்டாடும் இந்தச் சமயத்தில் உங்களுக்கு சர்வமங்களங்களும் உண்டாவதாக.''

3. [கீழ்க் கண்ட வாழ்த்து வெகு தூரத்திலுள்ள அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறது. மனத்தை அதிகமாக உருக்கக் கூடியதாக இருக்கிறது.]

''இன்று நான் மத்தியானம் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது தங்களுக்கு எழுத வேண்டுமென்ற ஆசை உதயமாயிற்று. நான் வாழ்ந்து வரும் பார்ட்டி போர்ட் போன்ற சிறிய நகரங்கள் உலக முழுவதிலும் உங்கள் வாழ்வால் உன்னத மடைந்திருக்கின்றன என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன்.

தாங்கள் ஹிந்து தலைவர். அதனால் தாங்கள் உலகத்திடமும் பாலஸ்தீனத்திடமும் எங்கள் கிறிஸ்துவாகிய ஏசுவின் முறைகளை அனுஷ்டிக்குமாறு ஞாபகப்படுத்துவது ஆச்சரியமாகத் தோன்றலாம். ஆனால் எனக்கு அப்படித் தோன்றவில்லை. ஏசு இன்னும் உயிரோடு இருக்கவே செய்கிறார். அவர் தான் உங்கள் மூலமாகப் பேசுகின்றார்.

தாங்கள் வாழ்ந்திருக்கும் காலத்தில் எனக்கு வாழக் கிடைத்தது என்னுடைய பெரிய பாக்கியங்களில் ஒன்றாகும்.

உலகமானது நல்லவிதமாக ஆய்க்கொண்டு வருகிறது என்பதையும் அமெரிக்கர்களாகிய நாங்கள் இந்திய மக்களோடும் சீன மக்களோடும் உண்மையான உறவு கொள்ள ஆரம்பித்திருக்கிறோம் என்பதையும் தாங்கள் அறிவீர்களென்று நம்புகிறேன்.''

**கடைசியாக**

விடிவதற்குமுன் இருள் அதிகமாக இருக்கும். கடவுளிடம் பிரார்த்தனை செய்து வந்தோம். கஷ்டப்படும் உலகமும் நமக்கு நல்ல காலம் வர வேண்டுமென்று விரும்பிற்று. அதனால் இந்திய வானத்தை இருளச் செய்து கொண்டிருந்த கார்மேகங்கள் கடைசியாக விலக ஆரம்பித்திருக்கின்றன. முஸ்லிம் லீக் இடைக் கால சர்க்காரில் சேர்ந்து கொள்ளக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

இன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகள் ஹிந்துஸ்தானியில் எழுதிக் கொடுத்த செய்தி வாசிக்கப்பட்டது. அதில் அவர் கூறியதாவது :—

''முஸ்லிம் லீக் இடைக்கால சர்க்காரில் சேர்ந்து கொள்ளும்போல் தோன்றுகிறது. காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீக்கிற்கும் இடையிலேற்படும் ஒற்றுமை 1942-ல் இருந்ததை விடவும் கிலாபத் இயக்க காலத்தில் இருந்ததை விடவும் அதிகமானதாகவும் அதிக காலம் நீடித்திருக்கக் கூடியதாகவும் இருக்கும்படியும் சகோதரர்கள் இனி மேல் ஒருவரை ஒருவர் ஏசவோ சொல்லவோ செய்யாமல் எல்லோரும் சமாதானமாக வாழும்படியும் அருள வேண்டுமென்று கடவுளிடத்தில் நீங்கள் எல்லோரும் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்.''

புது டில்லி, — 7-10-46 — பியாரேலால்

## பசு வளர்ப்பதற்கு இருபது யோஜனைகள்

அமரிக்க சர்க்காரின் விவசாய இலாகா தயாரித்துள்ள இந்த யோஜனைகள் நமக்கும் உபயோகமானவைகளே யாகும்.

(வி.ஜி.டு.)

**பசு**

(1) பசுக்களை வருஷத்திற்கு இரண்டு தடவையாவது திறமையுள்ள மிருக வைத்தியரைக் கொண்டு பரிசோதிக்கச் சொல்லவேண்டும். க்ஷயரோகம் போன்ற நோயுள்ளவைகளை விலக்கி விடவேண்டும்.

(2) விரைவாக ஓட்டியோ கூப்பாடு போட்டோ ஏசியோ பசுவுக்கு ஆத்திரம் உண்டாகும்படி செய்யக்கூடாது. அளவுக்கு மிகுந்த குளிர் உண்டாகும்படியும் செய்யக் கூடாது.

(3) தினந்தோறும் நன்றாக குளிப்பாட்டவேண்டும் மடியிலுள்ள ரோமத்தைக் கத்தரித்து விடவேண்டும்.

(4) பால் கறந்த உடனேதான் வெங்காயம் முட்டகோஸ் போன்ற மூக்கைத் துளைக்கும்படியான உணவுப் பொருள்களைக் கொடுக்கலாம். மற்ற வேளைகளில் கொடுக்கக்கூடாது. கொடுக்கும் உணவுப் பொருள்களில் மாற்றங்கள் செய்யவேண்டுமானால் சிறிது சிறிதாகத்தான் செய்யவேண்டும்.

(5) போதுமான அளவு சுத்த ஜலம் கொடுக்கவேண்டும். அது அதிகக் குளிருடையதாக இருக்கக் கூடாது.

**மாட்டுத் தொழு**

(6) பால் கறக்கும் பசுக்களை மற்ற மாடுகளோடு சேர்க்காமல் தனியாக தொழுவில் கட்டுவிக்க வேண்டும்.

(7) தொழு நல்ல காற்றோட்டம் உள்ளவையாயும், வெளிச்சம் உள்ளவையாயும், ஈரமில்லாதவையாயும் இருக்க வேண்டும்.

(8) தொழுவின் தளம் கட்டியாயிருக்க வேண்டும். வருஷத்திற்கு இரண்டு முறை வெள்ளையடிக்கவேண்டும்.

(9) தொழுவில் குப்பைத்தொட்டி எதுவும் இருக்கக் கூடாது. சாணத்தை நாற்பதடி தூரத்திற்கு அப்பாலேயே உரக்குழியில் கொட்டி வைக்க வேண்டும். தளத்தையும் சாக்கடையையும் தினந்தோறும் கழுவி விடவேண்டும்.

**பால் வைக்குமிடம்**

(10) பால் வைக்கும் அறை தூசி இல்லாததாயும், சுத்தமானதாயும், காற்றும் வெளிச்சமும், உள்ளதாயும் இருக்கவேண்டும்.

(11) பால் பாத்திரங்கள் உலோகத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும். அவைகளைத் துருப்பிடிக்க விடக்கூடாது. அவைகளைப் பாலுக்காக மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

(12) பால் பாத்திரங்களை, சுத்தமான ஜலத்தைக் கொண்டே கழுவவேண்டும். முதலில் வென்னீரைக் கொண்டு கழுவவேண்டும். பிறகு அதிகச் சூடான ஜலத்தைக்கொண்டு வேகவைக்க வேண்டும். கடைசியாக காற்றும் வெளிச்சமும் படும்படியான இடத்தில் பரப்பிவைக்க வேண்டும்.

பால் கறத்தல்

(13) பால் கறப்பதற்கு முன் தண்ணீர் சேராத எந்த உணவையும் கொடுக்கக் கூடாது.

(14) கைகளை நன்றாக கழுவிக் கொண்டே பால் கறக்கவேண்டும். பால் கறக்கும்போது சுத்தமான உடை உடுத்திக்கொள்ள வேண்டும். புகையிலை உபயோகிக்கக் கூடாது.

(15) பால் கறப்பதற்கு முன் மடியையும் அதைச் சுற்றியுள்ள பாகத்தையும் சுத்தமான ஈரத் துணி கொண்டு துடைக்க வேண்டும்.

(16) பால் கறக்கும் பொழுது சப்தம் செய்யக் கூடாது. விரைவாகக் கறக்க வேண்டும். தினந்தோறும் காலையிலும் மாலையிலும் ஒரு குறிப்பிட்ட நேரத்திலேயே கறக்க வேண்டும்.

(17) பால் ரத்தமாயிருந்தாலும் அல்லது வேறுவிதமாக இருந்தாலும் பால் பாத்திரத்தில் அழுக்கு ஏற்பட்டு விட்டாலும் அந்தப் பாலை உபயோகிக்கக் கூடாது.

(18) பால் கறந்தவுடன் அதை பால் வைக்கும் அறைக்குக் கொண்டு போய் உடனே துணியில் வடிகட்டி குளிர வைக்கவேண்டும்.

(19) குளிர வைக்கப்பட்ட பாலோடு சூடான பாலைக் கலக்கக் கூடாது. பாலைக் கட்டியாகும்படி குளிரவைக்கக் கூடாது.

(20) நோயாளிகளும் தொத்து நோய் வந்து குணமானவர்களும் பசுவின் பக்கத்திலும் பாலின் பக்கத்திலும் போகக் கூடாது.

## மில் ஒழிக

காந்தியடிகள் பிரார்த்தனைப் பிரசங்க மொன்றில் கூறியதாவது :—

சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரி ஸ்ரீ பிரகாசமும் அவருடைய மந்திரி சபையாரும் சென்னை மாகாணத்தில் கதர், மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு சம்பந்தமாகப் பெரிய திட்டங்களை நடத்தி வைக்க ஏற்றுக் கொண்டிருப்பது எனக்கு மிகுந்த திருப்தி அளிக்கின்றது. அவர்கள் என்னுடைய ஆசியைக் கோரினார்கள். இனிமேல் புதிதாக மில்கள் ஏற்படுத்துவதில்லை என்று வாக்குறுதி வாங்கிக் கொண்டு என்னுடைய ஆசீர்வாதத்தை அவர்களுக்கு அளித்தேன். காங்கிரஸ் மந்திரி சபைகள் புதிதாக மில்கள் ஏற்படுத்தத் திட்டம் போட்டால் அவர்களுடைய கதர் திட்டங்கள் வெறும் ஏமாற்றாகவே யிருக்கும் என்று எச்சரித்தேன். புதிய மில்கள் ஏற்படுத்தக் கோடிக் கணக்கான பணத்தைச் செலவு செய்வதாயிருந்தால் அவர்களுடைய கவனம் எல்லாம் அவற்றிலேயே செல்லும். ஜனங்களும் அவர்களுடைய கதர்த் திட்டங்களை விளையாட்டாகவே எண்ணி விடுவார்கள்.

காங்கிரஸ் தலைவர்கள் சொன்ன சொல் தவறாமல் நடக்க வேண்டும். இருதய சுத்தியாகவும் இருக்க வேண்டும். பிறர் கூறுவதைக் கேட்டு ஏமாந்து போகக்கூடாது. தேவைப்பட்டால் தங்கள் கொள்கையை நிலை நாட்டுவதற்காக தூக்குமேடை ஏறக் கூடத் தயாராக இருக்கவேண்டும். சென்ற யுத்தத்துக்கு முன்னால்கூட துணிமில்கள் நாடெங்கும் ஆரம்பிக்கப்பட்டன. புது மில்கள் ஆரம்பிக்கும்படி மாகாணங்கள் கேட்டுக்கொள்ளப் பட்டன. அவைகளுக்கு வேண்டிய மிஷின்கள் அதிக விலையுள்ளவை. ஆனால் அவற்றால் கிடைக்கும் லாபத்தைத் கண்டே மயக்கம் உண்டாகின்றது. துணி மில்கள் கிராமங்களில் வசிக்கும் இந்திய மக்களுக்கு விஷமே யாகும். நீர் ஏன் மில் முதலாளியின் விருந்தினராக இருக்கிறீர் என்று ஜனங்கள் கேட்கக்கூடும். ஆனால் நான் இந்த விதமான அபிப்பிராயம் உடையவனாக இருந்த போதிலும் மில் முதலாளிகள் என்னை அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவனாகவே கருதுகிறார்கள். அபிப்பிராய வித்தியாசம் ஏற்பட்டாலும் அதைச் சகித்துக்கொண்டு அன்பு செய்வதே அஹிம்சையாகும். ஸ்ரீ பிரகாசம் சென்னையில் புதிய மில்கள் ஏற்படுத்துவதில்லை என்பதாகவும் கதர் உணர்ச்சி பரவியவுடன் இப்பொழுதுள்ள மில்களையும் ஒழித்து விட எண்ணியிருப்பதாகவும் என்னிடம் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

பியாரேலால்.

## அரசியல் ஏன் ?

அமரிக்கப் பத்திரிகா நிருபர் சமீபத்தில் காந்தியடிகளைக் கண்டு பேசிக் கொண்டிருந்த போது—

“ நீங்கள் அரசியலில் ஈடுபட்டிருக்கிறீர்களே, ஆனால் அதை விட்டுவிடும் காலம் வருமல்லவா ?” என்று கேட்டார்.

அதற்கு காந்தியடிகள் கூறினார் :—

“அரசியலில் ஈடுபடாமல் அதிக ஊழியம் எதுவும் செய்ய முடியாது என்று கண்டதினாலேயே நான் அரசியலில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பது தங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது. அரசியல் வேலைகளை சமூக முன்னேற்றத்துடனும் சன்மார்க்க முன்னேற்றத்துடனும் சேர்த்தே தான் நாம் கவனிக்கவேண்டும். ஜனநாயக ஆட்சி நடக்குமிடத்தில் அரசியல் சம்பந்த மில்லாத எந்த விஷயமும் கிடையாது. பிரிட்டிஷ் ஆட்சியில் அரசியலை விட்டு விலகிநிற்கவே முடியாது. வாழ்வு முழுவதையும் அரசியலே ஆட்சி கொண்டு நிற்கின்றது. சகலரும் வரிகொடுத்தாக வேண்டும், அது தான் இந்தியாவில் நடைபெறும் பிரிட்டிஷ் ஆட்சியின் லட்சணமாகும். உதாரணமாக உப்பு வரியைக் கவனியுங்கள். அது சகலரையும் பாதிக்கிறது. கிராமத்து ஜனங்கள் பிரிட்டிஷ் ஆட்சி நடப்பதை வரி வசூலிப்பவரையும் போலீஸ்காரரையுங் கண்டே அறிந்து கொள்கிறார்கள். ஜனங்கள் கொள்ளை அடிக்கப்படும் பொழுது சும்மா உட்கார்ந்திருக்க முடியுமோ ?”

“ அப்படியானால் தங்கள் வேலை ஒரு நாளுமே முடிவடையாது போல் தோன்றுகிறது”. என்று அமெரிக்க நிருபர் கூறினார்.

“ ஆம், என்னுடைய வேலை என்னுடைய மரணத்துடன் தான் முடிவடையும். அன்னிய அரசாங்கமாயினும், தேசிய அரசாங்க மாயினும் நான் உண்மையான சமூக ஊழியனாக இருக்க விரும்பினால் சதா காலமும் சர்வ ஜாக்கிரத்தையாகக் கவனித்துவர வேண்டியவனே யாவேன். இது எல்லோருக்கும் பொருந்தும் ” என்று காந்தியடிகள் கூறினார்.

பியாரேலால்


## காந்தீய அரசியல்

காந்தியடிகளின் சிஷ்யர் திரு. எஸ். என். அகர்வால்
எழுதியது. மகாத்மாவின் பாராட்டுரையுடன்
கூடியது. நாமக்கல் கவிஞர் தமிழாக்கியது.
உலகத்துக்கு உய்யும் வழியைக் காட்டும்
உன்னதமான நூல்.
விலை ரூபாய் மூன்று
தமிழ்ப்பண்ணை
தியாகராயநகர், சென்னை.


அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை